A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 82 / 2024**

திரு ஆ. சந்திரன்,
4/60B1, கீழபுதுக்கோட்டை,
T.புதுக்கோட்டை அஞ்சல், மானாமதுரை தாலுக்கா,
சிவகங்கை மாவட்டம் – 623 701.

………மேல்முறையீட்டாளர்
(திரு ஆ. சந்திரன் &
திரு C. லோகநாதன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110 KV SS வளாகம், மானாமதுரை – 630 606.

2. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110 KV SS வளாகம், மானாமதுரை – 630 606.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு. P.ஜான்சன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/மானாமதுரை)

**மனு பெறப்பட்ட நாள்: 25-11-2024**

**கேட்புரை நாள்: 22-01-2025**

**ஆணை நாள்: 28-01-2025**

25.11.2024 அன்று பெறப்பட்ட திரு ஆ. சந்திரன், 4/60B1, கீழபுதுக்கோட்டை, T.புதுக்கோட்டை அஞ்சல், மானாமதுரை தாலுக்கா, சிவகங்கை மாவட்டம் – 623 701 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 82/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 22.01.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின்

பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி 2004–இல் அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி 2004–இல் அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்கம்பம் மற்றும் மின்பாதையை உரிமதாரரின் செலவில் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய புகார் மனுவின் அடிப்படையில் உதவிபொறியாளர் / இ& கா/ தொட்டியபட்டி அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டு பொதுப்பாதை சான்றின் அடிப்படையில் பாதை என குறிப்பிடப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்ற இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் 02.08.2024 அன்று சிவகங்கை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சிவகங்கை மின்பகிர்மான வட்டம் 11.09.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 சிவகங்கை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.09.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மனுதாரரின் கோரிக்கையான தனது பட்டா இடத்தில் செல்லும் மின்பாதையை மாற்றியமைக்க வேண்டி வைப்பு தொகை உதவி வேலை (DCW) யின் கீழ் உரிமதாரரின் இணையதளம் www.tangedco.org என்ற முகவரியில் விண்ணப்பிக்கும் படி மனுதாரர்களுக்கு இம்மன்றம் உத்தரவிடுகிறது.*
>
> *மேலும் இணையதளத்தில் மனுதாரர் விண்ணப்பித்தவுடன் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய மின் பகிர்மான விதி தொகுப்பு 6(37) மற்றும் தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதி தொகுப்பு 2(6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி 30 தினங்களுக்குள் கோரிக்கையை நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்று இம்மன்றம் உத்தரவு பிறப்பித்து இவ்வழக்கின் மீதான விசாரணையை இத்துடன் முடித்து கொள்கிறது.*
>
> *மேற்கண்ட முடிவுடன் இம்மன்றம் மனு எண்.33/2024 இறுதி செய்கிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 22.01.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு ஆ. சந்திரன் மற்றும் திரு C. லோகநாதன் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. P. ஜான்சன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ மானாமதுரை, சிவகங்கை மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்**:

5.1 மேல்முறையீட்டாளர் தான் ஒரு விவசாயி என்றும், கடந்த ஆண்டுகளில் மேலைநாடு சென்று கூலியாக வேலை செய்து வந்ததாகவும், தன் மனைவி மாற்றுதிறனாளி என்றும், தான் வெளிநாட்டில் வேலை செய்து வந்த தருவாயில் தன் மனைவி மற்றும் தன் குடும்ப நபர்களிடம் எந்த வித முன் அனுமதியின்றியும் தனக்கு சொந்தமான நிலம் பட்டா எண்.1104 மற்றும் மற்றொரு பட்டா நிலாமான 1121 என்ற இரு இடங்களிலும் மின் கம்பம் நடப்பட்டுள்ளதாகவும் தெரிவுத்துள்ளார்.

5.2 மின்கம்பிகளும் தன் நிலத்தின் நடுவே செல்வதால் கட்டுமான செய்ய மிகுந்த சிரமமான சூழ்நிலை உருவாகிவுள்ளதாகவும், எனவே மின்கம்பம் மற்றும் மின் கம்பிகளையும் தன் நிலத்தின் இருந்து அப்புறப்படுத்துமாறு மின்குறைதீர்ப்பாளராகிய தங்களுக்கு கோரிக்கை வைப்பதாகவும், இதன் மூலம் மிகுந்த மன உளைச்சளுக்கு ஆளாகி உள்ளதாகவும், இந்த மனு வாயிலாக தெரியப்படுத்த விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும், தன் நிலத்தில் அனுமதி இல்லாமல் ஊன்றப்பட்ட மின்கம்பத்தை மனுதாராகிய தன்னிடம் எந்தவித தொகையும் வசூல் செய்யாமல் தாங்கள் மாற்றிதருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 **எதிர்மனுதாரரின் வாதங்கள்**:

6.1 திரு ஆ. சந்திரன் என்பவர் தன்னுடைய பட்டா எண் 1204 மற்றும் பட்டா எண் 1121 என்ற இடங்களில் மின்பாதை மற்றும் மின் கம்பங்கள் சென்று கொண்டிருப்பதை அகற்ற வேண்டும் என்று மனு கொடுத்ததாகவும், திரு. ஆ.சந்திரன், 4/60B1, கீழபுதுக்கோட்டை அவர்களின் இடத்தை உதவி மின் பொறியாளர், ஊரகம், மானாமதுரை கள ஆய்வு செய்த போது அவர் வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் 427-012-387, மின் இணைப்பு பெற்ற நாள் 03-04-2000 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 அதன் பிறகு திரு. ப. கருப்பையா. கீழபுதுக்கோட்டை என்பவருக்கு மின் கம்பம் நடப்பட்டு மின்பாதை அமைக்கப்பட்டு மின் இணைப்பு எண் 427-012-462 நாள் 07-06-2004 அன்று கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அப்போது திரு. சந்திரன் என்பவர் கம்பம் நட்டு மின்பாதை அமைக்க எந்தவிதமான ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை எனவும், தற்போது திரு. சந்திரன் என்பவருடைய கட்டிடத்திற்கும் தாழ்வழுத்த மின் பாதைக்கும் இடையில் பக்கவாட்டில் 9 அடியும், மின்பாதை கட்டிடத்திற்கு இணையாக (Parallel) செல்வதால் கட்டிடத்தின் மேற்பரப்பிற்கும் கட்டிடத்திற்கும் இடையில் 9 அடியும் உள்ளதாகவும், எனவே, Rule 61 of CEA (measure relating to safety and electric supply) Regulation 2010 ன்படி உரிய பாதுகாப்பு இடைவெளியுடன் இருப்பது தெரியவருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் Indian Telegraphic Act 1885, Section 164 of the Electricity Act 2003ன்படி தமிழ்நாடு அரசு மின் கம்பம் மற்றும் மின் பாதை அமைக்க TNPDCL க்கு அனுமதி அளித்துள்ளபடி ரோடு ஓரத்தில் மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைத்து திரு.ப.கருப்பையா என்பவருக்கு சுமார் 21 வருடங்களுக்கு முன்னால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 எனவே திரு. ஆ. சந்திரன் என்பவர் மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்ற விரும்பும் பட்சத்தில் தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் விதி எண் 5(6) ன்படி திரு. ஆ. சந்திரன் என்பவர் உரிய விண்ணப்பம் அளித்து பங்களிப்பு வைப்பு நிதி திட்டம் (DCW) திட்டத்தின் கீழ் மின் கம்பம் மற்றும் மின்பாதையை இடம் மாற்றம் செய்ய ஆகும் தொகையை செலுத்தும் பட்சத்தில் மின் கம்பம் மற்றும் மின்பாதையை இடமாற்றம் செய்து கொடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தான் வெளிநாட்டில் வேலை செய்து வந்த தருவாயில் தன் மனைவி மற்றும் தன் குடும்ப நபர்களிடம் எந்த வித முன் அனுமதியின்றியும் தனக்கு சொந்தமான நிலம் பட்டா எண்.1104 மற்றும் மற்றொரு பட்டா நிலாமான 1121 என்ற இரு

இடங்களிலும் மின் கம்பம் நடப்பட்டுள்ளதாகவும், மின்கம்பிகள் தன் நிலத்தின் நடுவே செல்வதால் கட்டுமானம் செய்ய மிகுந்த சிரமமான சூழ்நிலை உருவாகிவுள்ளதாகவும், எனவே மின்கம்பம் மற்றும் மின் கம்பிகளையும் தன் நிலத்தில் இருந்து தன்னிடம் எந்தவித தொகையும் வசூல் செய்யாமல் மாற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மேல்முறையீட்டாளர் திரு ஆ. சந்திரன் என்பவர் தன்னுடைய பட்டா எண் 1204 மற்றும் பட்டா எண் 1121 என்ற இடங்களில் மின்பாதை மற்றும் மின் கம்பங்கள் சென்று கொண்டிருப்பதை அகற்ற வேண்டும் என்று மனு கொடுத்ததாகவும், அதனை தொடர்ந்து கள ஆய்வு செய்த போது அவர் வீட்டில் உள்ள மின் இணைப்பு எண் 427-012-387, மின் இணைப்பு பெற்ற நாள் 03-04-2000 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 அதன் பிறகு திரு. ப. கருப்பையா. கீழபுதுக்கோட்டை என்பவருக்கு மின் கம்பம் நடப்பட்டு மின்பாதை அமைக்கப்பட்டு மின் இணைப்பு எண் 427-012-462 நாள் 07-06-2004 அன்று கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அப்போது திரு. சந்திரன் என்பவர் கம்பம் நட்டு மின்பாதை அமைக்க எந்தவிதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை எனவும், தற்போது திரு. சந்திரன் என்பவருடைய கட்டிடத்திற்கும் தாழ்வழுத்த மின் பாதைக்கும் இடையில் பக்கவாட்டில் 9 அடியும், மின்பாதை கட்டிடத்திற்கு இணையாக (Parallel) செல்வதால் கட்டிடத்தின் மேற்பரப்பிற்கும் கட்டிடத்திற்கும் இடையில் 9 அடியும் உள்ளதாகவும், எனவே, Rule 61 of CEA (measure relating to safety and electric supply) Regulation 2010-இன்படி உரிய பாதுகாப்பு இடைவெளியுடன் இருப்பது தெரியவருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும் Indian Telegraphic Act 1885, Section 164 of the Electricity Act 2003-இன்படி தமிழ்நாடு அரசு மின் கம்பம் மற்றும் மின் பாதை அமைக்க TNPDCL-க்கு அனுமதி அளித்துள்ளபடி ரோடு ஓரத்தில் மின்கம்பம் மற்றும் மின்பாதை அமைத்து திரு.ப.கருப்பையா என்பவருக்கு சுமார் 21 வருடங்களுக்கு முன்னால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே திரு. ஆ. சந்திரன் என்பவர் மின்கம்பம் மற்றும் மின்பாதையை மாற்ற விரும்பும் பட்சத்தில் தமிழ்நாடு மின் வழங்கல் விதிகளின் விதி

எண் 5(6)–இன்படி உரிய விண்ணப்பம் அளித்து பங்களிப்பு வைப்பு நிதி திட்டம் (DCW) திட்டத்தின் கீழ் மின்கம்பம் மற்றும் மின்பாதையை இடம் மாற்றம் செய்ய ஆகும் தொகையை செலுத்தும் பட்சத்தில் மின்கம்பம் மற்றும் மின்பாதையை இடமாற்றம் செய்து கொடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) விதித் தொகுப்புகளில் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**68. Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*

*(2) The provisions contained in sub-section (1) shall not apply–*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer".*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

"***(29) Service Lines:***

*xxx*

*xxx*

*(6) The Consumer shall permit the Licensee to install all requisite equipments such as Transformers, switchgears, meters, etc., and to lay necessary cables or overhead lines and to provide connections thereto on the consumer's premises and shall also permit the Licensee to extend supply to other consumers through the cables, lines and equipments installed in the consumer's premises, provided that supply to the consumer in the opinion of the Engineer is not thereby unduly affected."*

மேற்கூறிய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6)–இன்படி நுகர்வோருக்குத் தரப்படும் மின்னிணைப்புக்குப் பேரளவு பாதிப்பு ஏதும் ஏற்படாதெனப் பொறியாளர் கருதும் போது நுகர்வோர் மின்மாற்றிகள், இணைப்பமைப்புகள், மின்னளவிகள் போன்ற அனைத்து தேவைப்படும் சாதனங்களை நிறுவவும் நுகர்வோரது இருப்பிடத்துக்கு இணைப்பு தரவும் அங்கிருந்து பிற நுகர்வோர்களின் இருப்பிடங்களுக்கு இணைப்பு தரவும் தேவைப்படும் மின் வடம், மேனிலைத் தொடர் மற்றும் பிற

இணைப்புகளை அமைக்கவும் உரிமதாரருக்கு இசைவு தர வேண்டும் என தெரிய வருகிறது.

7.7 எனவே, இந்திய மின்சார சட்டம், பிரிவு 164 மற்றும் தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 164. Exercise of pwers of Telegraph Authority in Certain cases-***

*164. Exercise of powers of Telegraph Authority in certain cases. The Appropriate Government may, by order in writing, for the placing of electric lines or electrical plant for the transmission of electricity or for the purpose of telephonic or telegraphic communications necessary for the proper co- ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying electricity under this Act, subject to such conditions and restrictions, if any, as the Appropriate Government may think fit to impose and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph authority possesses under that Act with respect to the placing of telegraph lines and sts for the posts purposes of a telegraph est established or maintained, by the Government or to be so established or maintained."*

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*
3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*
4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.8 மேற்கண்டுள்ள இந்திய மின்சார சட்டம், பிரிவு 68, 164 மற்றும் இந்திய

தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.9 மேலும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ள தாழ்வழுத்த மின்பாதையானது 2000 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது என்பதும், அந்த மின்பாதையிலிருந்துதான் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதும், 2004 ஆம் ஆண்டு திரு கருப்பையா என்பவருக்கு மின் இணைப்பு வழங்க மின்கம்பங்கள் ஊன்றப்பட்டதும் தெரியவருகிறது. அம்மின்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்பட்டதாக தெரியவில்லை. மேலும், அம்மின்பாதை அமைக்கப்பட்ட இடமானது பொதுமக்கள் பயன்படுத்தும் பாதையாக எந்தவொரு வேலியும் இல்லாமல் பொதுப்பாதையாக இருப்பதாக எதிர்மனுதாரர் தெரிவித்த நிலையில் அப்பயன்பாட்டை மேல்முறையீட்டாளர் மறுக்கவில்லை.

7.10 அன்றைய தினத்தில் பொதுப்பாதை என்ற அடிப்படையிலேயே அதன் ஓரமாக மின்பாதை அமைக்கப்பட்டு மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கிய நிலையில் தொடர்ச்சியாக அதே சீரமைப்பில் மின்பாதை விஸ்தரிப்பு செய்யப்பட்டு திரு கருப்பையா அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அமைக்கப்பட்ட மின்பாதை மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு வெளியே இருப்பதும் ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

7.11 மேலும், 2004–இல் இருந்து அமைக்கப்பட்ட மின்பாதை மேல்முறையீட்டாளரின் வீட்டிற்கு பக்கவாட்டில் 9 அடி கிடைமட்ட இடைவெளியுடன் பாதுகாப்பான நிலையில் அமைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. இது CEA (measure relating to safety and electric supply) Regulations 2023 இன் 62 வது விதியில் கூறப்பட்டுள்ள கட்டிடத்திற்கும் நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின்பாதை கட்டமைப்புக்கும் இடையே உள்ள இடைவெளி (Horizontal *clearance) 1.2 metres*-ஐ விட அதிகமாக இருப்பது தெரியவருகிறது. மேலும்

மின் கட்டமைப்பு உரிமதாரர் நிறுவுவது செலவீனங்களின் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு மின் இணைப்பு வழங்கும் நிகழ்வாகவே நடைபெறுகிறது.

7.12 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் வீட்டின் அருகில் காலியாக இருந்த இடத்தில் பாதுகாப்பு விதிகளின்படி அமைக்கப்பட்ட மின் கட்டமைப்பை அது நிறுவப்பட்ட 2004–இல் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் தற்சமயம் 2024–இல் வாரிய செலவில் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை காலங்கடந்த நிலையில் எழுப்புவதாக தெரியவருகிறது. மேலும் மின்பாதை அமைக்கப்பட்ட 2004 காலகட்டத்தில் ஏதாவது உரிமதாரரிடம் ஆட்சேபனை கடிதம் கொடுக்கப்பட்டதா என வினவியபோது அவ்வாறு செய்யவில்லை என தெரிவித்தார்.

7.13 இந்நிலையில் விதிகளின்படி போதிய இடைவெளியுடன் நிறுவப்பட்ட மின்பாதையை மேல்முறையீட்டாளர் இடமாற்றம் செய்ய விரும்பினால் அதற்கு ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.14 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே செலுத்திவிட வேண்டும் எனவும் அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகிறது.

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் TNERC Supply Code Regulation 6–இன்படி – பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின் பேரில் மதிப்பீடு தயார் செய்து உரிய மதிப்பீட்டு தொகையை

செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை மாற்றிதர இயலும் என்ற நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, உரிய விதிகளின்படி போதுமான பாதுகாப்பு இடைவெளியுடன் நிறுவப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மேல்முறையீட்டாளர் மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் வழங்கல் விதி எண்.6–ன்படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 82/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு ஆ. சந்திரன், – By RPAD
4/60B1, கீழபுதுக்கோட்டை,
T.புதுக்கோட்டை அஞ்சல், மானாமதுரை தாலுக்கா,
சிவகங்கை மாவட்டம் – 623 701.

2. செயற்பொறியாளர்/ பகிர்மானம்/மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110 KV SS வளாகம், மானாமதுரை – 630 606.

3. உதவி செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ மானாமதுரை,
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
110 KV SS வளாகம், மானாமதுரை – 630 606.

4. மேற்பார்வை பொறியாளர், – By Email
சிவகங்கை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
சிவகங்கை கலெக்டர் அலுவலகம், சிவகங்கை – 630 562.

5. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.